# <u>செய்தி வெளியீடு</u>

## <u>கொடைக்கானல் மக்களின் 70 ஆண்டு கால கோரிக்கையை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றினார்</u>

மலைகளின் இளவரசி, இந்தியாவின் சுவிட்சர்லாந்து என்று அழைக்கப்படும் கொடைக்கானல் நகருக்கு அழகு சேர்க்கும், சுற்றுலா பயணிகளின் மனதை மகிழ்விக்கும் கொடைக்கானல் ஏரியின் கட்டுப்பாடு 70 ஆண்டுகளுக்குப் பின் மாண்புமிகு துணை முதலமைச்சரின் சீரிய முயற்சியால் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 7.5.1951 ஆண்டு வரை கொடைக்கானல் ஏரி நகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. அரசாணை எண்.2063 – வளர்ச்சித்துறை நாள் 8.5.1951 யின்படி கொடைக்கானல் ஏரியின் கட்டுப்பாடு மீன்வளத்துறைக்கு 10 ஆண்டுகளுக்கு மாற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து ஏரியின் கட்டுப்பாடு மீன்வளத்துறை வசமே இருந்து வந்தது.

இந்நிலையில் உலக புகழ்பெற்ற கொடைக்கானல் ஏரியின் சுற்றுச்சூழல் மற்றும் அழகை பாதுகாக்கும் பொருட்டு ஏரியின் முழு கட்டுப்பாட்டையும் நகராட்சி வசம் கொண்டுவர கொடைக்கானல் நகரமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் தீர்மான நகல் மற்றும் கோரிக்கை மனுவினை கொடைக்கானல் நகரமன்றத் தலைவர் திரு.எஸ். முகமது இப்ராஹிம் வழங்கினார்.

இப்பிரச்சினை குறித்து ஆய்வு செய்த தமிழக அரசானது, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 125(1) கீழ் உள்ளாட்சி பகுதிகளில் உள்ள அனைத்து நீர் நிலைகளும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமானது என்பதன் அடிப்படையில், கொடைக்கானல் ஏரியின் கட்டுப்பாட்டை நகராட்சி

வசம் ஒப்படைக்க முடிவெடுத்துள்ளது. மீன் வளர்த்தல் மற்றும் மீன் பிடித்தல் ஆகியவை மீன்வளத்துறை வசமே தொடர்ந்து இருக்கும். இது துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் சீறிய முயற்சியால் கொடைக்கானல் மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய கொடையாகும்.

அதன் தொடர்ச்சியாக, கொடைக்கானல் நகரில் உள்ள ஏரியின் கட்டுப்பாட்டு உரிமையை மீன்வளத்துறையிடம் இருந்து கொடைக்கானல் நகராட்சிக்கு மாற்றம் செய்து அதற்கான அரசாணை எண்.105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் 26.6.2009 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இச்சாதனை குறித்து கொடைக்கானல் நகர மன்றத் தலைவர் திரு.எஸ். முகமது இப்ராஹிம் அவர்கள் கூறியதாவது: "கொடைக்கானல் ஏரியில் படகுகளை இயக்க பதிவு செய்வது மற்றும் உரிமம் அளிப்பதால் கிடைக்கும் வருமானத்தில் இனி 90 சதவீதம் நகராட்சிக்கும், 10 சதவீதம் மீன்வளத்துறைக்கும் பிரித்து வழங்கப்படும். இதன் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து கொடைக்கானல் நகரில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள், குறிப்பாக சாலை வசதிகள், மின்விளக்கு வசதி, பூங்காக்கள் அமைத்து நகரை மேலும் அழகுப்படுத்துதல், குடிநீர் வசதி ஆகியன மேற்கொள்ளப்படும். ஏரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளின் சுற்றுச்சூழலும், அழகை கூட்டும் நடவடிக்கைகளும் தொடர்ந்து எடுக்கப்படும்" என்றார்.

நகராட்சி வசம் ஏரியின் கட்டுப்பாட்டை ஒப்படைத்த இந்நிகழ்வு, கொடைக்கானல் மக்களிடம் பெருத்த ஆதரவை பெற்றுள்ளது. இதற்கான முயற்சியை மேற்கொண்டதற்காக, கொடைக்கானல் நகரமன்றத் தலைவர் திரு.எஸ். முகமது இப்ராஹிம் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து தங்களது இதயப்பூர்வமான நன்றியினை கொடைக்கானல் நகர மக்களின் சார்பாக தெரிவித்துக் கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.